2017 ஜூன் 29]

திரு. எஸ். சுதர்சனம்: இந்தத் துறைமுகத்தை மத்திய அரசு தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கத் தயாராக இருக்கின்றது என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது மட்டுமல்ல, இந்தத் துறைமுகம் 480 கோடி ரூபாய் நிகராக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) போதும், போதும், உட்காருங்கள் நீங்கள். திரு. ராஜா, திரு. வேலு, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காமராஜர் துறைமுகம், முந்தைய எண்ணூர் துறைமுகம் மத்திய அரசின் மணி ரத்னா அந்தஸ்து பெற்ற ஒரு பொதுத் துறை நிறுவனமாகும். இப்பொருள் சம்பந்தமாக காமராஜர் துறைமுக நிருவாகத்திடமிருந்தும், மத்திய அரசின் கப்பல் போக்குவரத்து துறையிடமிருந்தும் எவ்வித அறிக்கையும் அரசிற்கு வரப்பெறவில்லை. 19–6–2017 அன்றைய செய்தித்தாளில் இந்தத் துறைமுகத்தின் 100 சதவிகித பங்கினை மத்திய அரசு விலக்கிக்கொள்வதாக செய்திகள் வெளியாகி உள்ளன. மத்திய அரசின் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகத்திலிருந்து இப்பொருள் சம்பந்தமான விவர அறிக்கையினைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கை கேட்டு, நடவடிக்கை எடுக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார். (குறுக்கீடு) விடுங்கள், பிறகு பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நாளைக்கு பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) 2017–2018 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை. (குறுக்கீடு)

(இ) ஆர்.கே. நகர் தொகுதி, மீன்பிடி துறைமுகம், மீன் விற்கும் நவீன வளாகத்திற்கு பாதுகாப்பு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. P. வெற்றிவேல், நீங்கள் ஏதோ raise செய்ய வேண்டுமென்று சொன்னீர்கள். மீனவர் பிரச்சினை என்று சொன்னீர்கள். சுருக்கமாகச் சொல்லி, அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.

[2017 ஜூன் 29

திரு. P. வெற்றிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கழக பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களுக்கும், கழக துணைப் பொதுச் செயலாளர் திரு. டி.டி.வி. அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆர்.கே. நகர் தொகுதி, 47–வது வட்டத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைந்துள்ளது. இது 90 சதவிகிதம் ஆர்.கே. நகர் தொகுதிக்குட்பட்ட பகுதியாகும். நம்முடைய அரசாங்கம், மீன் விற்கும் நவீன வளாகத்தை புதிதாகக் கட்டியிருக்கிறது. அந்த வளாகம் கட்டியது தவறு என்று நான் இப்போது சொல்ல வரவில்லை. அங்கு ஆயிரக்கணக்கான சில்லரை வியாபாரிகள், வயதுப் பெண்கள் இரவு 12 மணியிலிருந்து ஒரு மணிக்குள் வந்து, துறைமுகத்தின் கடலோரப் பகுதியில் படுத்து உறங்கி, விடியற்காலையில் எழுந்து boat வர, வர மீன்களை வாங்கி retail market–க்கு எடுத்துக்கொண்டு போவார்கள். இப்போது கட்டப்பட்டுள்ள அந்த இடம் அவர்களுக்கு பாதுகாப்பானதாக இல்லையென்பது அவர்களுடைய கோரிக்கையாகும். இப்போது புதிதாகக் கட்டப்பட்ட வளாகம் isolated place, தனிமைப்படுத்தப்பட்ட இடமாகும். உடனடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, அந்தப் பகுதியில் போலீஸ் காவல், காவல் என்றால் ஒரு outpost police station–ஐ அமைத்து, அதற்கு S.I. rank–ல் ஒரு காவல் அதிகாரியைப்போட்டு, அங்கு strength–ஐ அதிகரிக்கவேண்டும். இது அதிக அளவில் தவறுகள் நடக்கக்கூடிய இடமாகும். பெண்கள் விசைப் படகு இங்கு நிற்க வேண்டும் என்கிறார்கள். சில்லரை வியாபாரிகள் எல்லாம் தொன்றுதொட்டு விற்றுக் கொண்டிருக்கின்ற இடத்திற்கு மாற்றித் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். இவர்கள் இரண்டு பேரையும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேச வேண்டும். ** புரட்சித் தலைவர் நூற்றாண்டு விழா, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதெல்லாம் வேண்டாம். அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூன் 29] [பேரவைத் தலைவர்]

நீக்கப்படுகின்றன. நீங்கள் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குப் கொண்டுவந்து, உட்காருங்கள்.

திரு. P. வெற்றிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். புரட்சித் தலைவர் அவர்களின் நூற்றாண்டு விழா நடக்கவிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், அந்த மீனவ மக்களுக்காக, அவர் மிகப் பெரிய பாடலைப் பாடியிருக்கின்றார். அது உலகப் பிரசித்தி பெற்றது. தயவுசெய்து அந்த மக்களை அழைத்துப் பேசி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு, இதற்கு ஒரு தீர்வைக் காணவேண்டும். அதைவிடுத்து, விலகி தூரமாக நிற்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தி, விடை பெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசியாவிலேயே மிகச் சிறந்த மீன்பிடித் துறைமுகமாக அதை உருவாக்க வேண்டும் என்ற அந்த உன்னத முனைப்போடுதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–2016 ஆம் ஆண்டில் 90 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, பணிகள் நடைபெற்றன. அதிலே முக்கியமான பணியான 12 கோடி ரூபாயிலே இந்த ஏலக்கூடம் மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த ஏலக்கூடம் பயன்பாட்டிற்கு வரவேண்டுமென்ற அடிப்படையில்தான் சிறந்த துறைமுகமாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போய்ப் பாருங்கள் அந்த இடத்தை என்று நேற்றைக்குக்கூட நான் பத்திரிகையாளர்களிடம் சொன்னேன். இன்றைக்கு இருக்கின்ற இடம் அம்மா திறந்து வைத்த ஏலக்கூடம். மீன் auction விடுகின்ற இடம் ஒரு மடங்கு என்றால், இது 2½ மடங்கு இருக்கிறது. Freezer, cold storage, CCTV camera அனைத்தும் இருக்கின்றன. எனவே, எந்தவிதமான அச்சமும் இல்லை.

பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவர்கள் போய்ப் பார்த்து, முடிவு செய்து, இந்த மன்றத்தில் சொல்லுங்கள். கண்டிப்பாக நாங்கள் முடிவெடுக்கிறோம். ஆனால், இதை விடுத்து, (குறுக்கீடு) நான் சொல்வதெல்லாம், அம்மா அவர்கள் 12 கோடி ரூபாய் செலவு செய்து திறந்து வைத்ததை. . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், நீங்கள் ஏன் தேவையில்லாததை எல்லாம் சொல்கிறீர்கள்?*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *அம்மா அவர்கள் 12 கோடி ரூபாய் செலவு செய்து கட்டியதை, உபயோகத்திற்கு வரக் கூடாது என்று நினைக்கிறீர்களா? என்னைப் பொறுத்தவரையில், சுகாதாரமான முறையில் மீன்கள் கையாளப்பட வேண்டும். மீன்கள் விற்கப்பட வேண்டும். மீனவர்களின் வாழ்வாதாரம் உயர வேண்டும். இப்போது இருக்கின்ற இடத்தைப் பாருங்கள். Open space-ல் கொட்டும் மழையிலும், வெயிலிலும், கடல் தண்ணீரிலும் கால் நனைந்து, இன்றைக்கு சேற்றுப் புண்ணினால் அந்த மீனவ மகளிர் கஷ்டப்படுகிறார்கள். இப்போது ஏலக்கூடத்தினை இரண்டரை மடங்கு அதிகம் உள்ள இடத்திற்குதான் மாற்றியிருக்கிறோம். அதுவும் கிட்டத்தட்ட 25 மீட்டரிலிருந்து 50 மீட்டர். எனவே, இதிலே எந்தவித உள்நோக்கமும் கிடையாது. எனக்கு boat கிடையாது. அட்வான்ஸ் கொடுத்து, boat-ல் சென்று மீன் வாங்குகின்ற வழக்கமும் இல்லை. அதனாலே, இதைத் தவறான கண்ணோட்டத்தோடு பார்க்காமல், மீனவர்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டம் நடத்தப்பட்டு, அதன் அடிப்படையிலே இப்போது மீனவர்கள் 90 சதவீதம் அளவிற்கு அங்கு சென்றுவிட்டார்கள். எனவே, இதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. உரிய நியாயம் நிச்சயம் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.*